2022 ஏப்ரல் 20]

இருக்கிறது. ஆனால், வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினால், கூடுதல் கட்டடம் வழங்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்வி கோளரங்கம் குறித்தது. துணைக் கேள்வியைக் கேட்டால், விவரமாக கேட்க வேண்டாமா! மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரக்கோணம் அரசு கலைக் கல்லூரியில் 1,500 மாணவ மாணவியர் படிக்கின்றனர். அங்கே வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருப்பதால் இரண்டு* shift-*களாக அந்தக் கல்லூரி நடைபெறுகின்றது. ஒரே* shift *ஆக அந்தக் கல்லூரி நடைபெற வேண்டும். 25 வகுப்பறைகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, திரு. ஆ. கோவிந்தசாமி அவர்களுக்குச் சொன்ன பதில்தான், உங்களுக்கும். கோளரங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று கேளுங்கள். கோளாறான கேள்வியெல்லாம் கேட்கிறீர்கள், உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. *மணிக்கண்ணன், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***3052—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உளுந்தூர்பேட்டை தொகுதியிலுள்ள திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, கூவாகத்தில் திருவிழா நடைபெறுகின்ற காரணத்தினால், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் வர இயலாத நிலையில் இந்தக் கேள்வியை அவர் சார்பாக எழுப்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியில், உளுந்தூர்பேட்டை, திருநாவலூர் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் திருநாவலூர் விற்பனைக் கூடத்தில் பொருட்களை விற்க வருகின்றனர். அவற்றை வாங்கிப் பயன்படுத்துகிற பல சிறு விவசாயிகளும் அந்த விற்பனைக் கூடத்திற்கு வந்து பயனடைகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைகிற திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகத்திடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. கடந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் ஆறு ஒழுங்குமுறை விற்பனைக்க கூடங்கள் கட்டுவதற்கு NABARD வங்கி உதவியுடன் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கிட அறிவிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நிலத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 20]

பரிவர்த்தனை கூடத்துடன்கூடிய அலுவலகக் கட்டடம், 1,000 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு, உலர்களம், 60 மெட்ரிக் டன் எடை மேடை, மின்னணு பரிவர்த்தனை மற்றும் தரம் பிரிப்புக் கூடம், விவசாயிகள் ஓய்வு அறை, சுற்றுச்சூழல் வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளுடன் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், கேட்டவரம்பாளையம் ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் இந்த ஆண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதே கேள்வியை கடந்த முறையும் கேட்டார். அதற்கு பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையில் 6 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியிலிருந்து கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களை கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, திருத்துறைப்பூண்டியிலேயே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு மாண்புமிகு*

அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் வாயிலாக கிட்டத்தட்ட 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைந்திருக்கின்றன; 27 விற்பனைக் குழுக்கள் உள்ளன. இப்பொழுது சொந்தக் கட்டடம் இல்லாத கிட்டத்தட்ட 65 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கட்டடம் கட்ட முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள திருத்துறைப்பூண்டியில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வேண்டுமென்றால், அந்தப் பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தேவையா என்பதை அறிந்து, தேவைப்படும் பட்சத்தில் பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், தேவிகாபுரம் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் 40 ஆயிரம் விவசாயக் குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். அந்த விவசாயிகள் அனைவரும் நெல் சாகுபடி மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்கள் நிலங்களில் விளைவிக்கும் விளைபொருட்களை விற்பனைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்றால், 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஆரணி நகருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: எனவே, தேவிகாபுரம் ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா என கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விவசாயிகளுக்குத் தேவைப்படும் இடங்களில் விற்பனைக் கூடம் அமைப்பதற்கு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும். அதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையில் அதிகமாக வரத்து வரும் விளைபொருட்களை விற்பதற்கு, திருவண்ணாமலை விற்பனைக் கூடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பக்கத்தில் ஆரணி இருக்கிறது; அருகில் உள்ள விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் இடமளிக்க வேண்டும், அதற்குரிய கட்டட வசதி வேண்டும். இத்தகைய வாய்ப்புகள் இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் எதன் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது? தாலுகாவிற்கு ஒன்றா? வட்டத்திற்கு ஒன்றா? மாவட்டத்திற்கு எத்தனை அமைக்கப்படும் என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த கட்சி 10 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் அமைச்சராக இருந்தார். அண்ணன் திரு. வைத்திலிங்கம் அவர்கள் அமைச்சராகவும் இருந்தார்; நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இருந்தபோதிலும், அவருக்கு சந்தேகம் வந்திருக்கிறது. அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை; வேளாண் துறை சம்பந்தமாக அவர்கள் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லாத

காரணத்தால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இது ஒரு நல்ல கேள்வி. ஓர் அமைச்சராக, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருக்கே எந்த விகிதாச்சாரத்தில், எந்த அடிப்படையில் உருவாக்க வேண்டும் என்று தெரியவில்லை. அதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேளாண்மைக்கு தனி பட்ஜெட் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நோக்கம் இப்போது நிறைவேறியிருக்கிறது. தற்போது, மக்களின் பார்வை வேளாண் துறையின் பக்கம் திரும்பியிருக்கிறது. அரசாங்கத்தினுடைய கவனிப்பு, நேரடி பார்வை இதில் இருக்கிறது. எனவே, வேளாண்மைக்கு தனி பட்ஜெட் என்ற அறிவிப்பு, முழுமை பெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அது குழந்தையாகப் பிறந்து, தற்போது வளர்கின்ற குழந்தையாக இருக்கிறது.

விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்த விளைபொருட்களை அருகிலிருக்கின்ற விற்பனைக் கூடங்களில் விற்க வேண்டும்; நல்ல விலையும் கிடைக்க வேண்டும்; இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனையாளர்களும், உற்பத்தியாளர்களும் ஒருங்கிணைந்து போட்டி அடிப்படையில் கேள்விகள் கேட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு விற்பனைக் கூடங்கள் பயன்படுகின்றன. அந்த வகையில், விதிகளின்படி ஒரு ஏக்கர் நிலம் வேண்டும். அதற்குரிய கட்டட வசதி வேண்டும். அரசாங்கத்தின் உரிய அனுமதி பெற வேண்டும். அத்தகைய வாய்ப்புகள் இருக்கும்போது இது உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***874—மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, வேட்டவலம் பேரூராட்சிக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?